Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 285/ 2024 Date:13.05.2026
Deposition of witness for prosecution: PW4 ( LW2)
Defence:
Court:

| Name | ராஜாங்கம் | Village | க.புதுப்பட்டி |
|---|---|---|---|
| Father/ Husband Name | ராசுத்தேவர் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 56 /26 | Calling | ஓட்டுநர் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 13.05.2026 TIME 12.50 **PM**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

கடந்த 09.08.2023-ம் தேதி மாலை 04.30 மணியளவில் கம்பம் புதுப்பட்டி நாயக்கர் தெரு அருகே பிரதான சாலையில் நானும், அன்சாரி என்பரும் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது, பள்ளிவாகனம் பதிவெண் தற்போது ஞாபகமில்லை, எங்களது இருசக்கர வாகனத்தை முந்தி வந்தது. அந்த பள்ளி வாகனம் கம்பம் புதுப்பட்டி கள்ளர் பள்ளி அருகே உள்ள வேகத்தடையில் பள்ளி வாகனத்தின் ஓட்டுநர் கவனமின்றி ஏற்றி இறக்கிய போது, அந்த பள்ளி வாகனத்தில் நடத்துநராக இருந்த நபர் கீழே விழுந்ததில் பள்ளி வாகனம் அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டது. நானும், அன்சாரியும் வாகனத்தை நிறுத்திவிட்டு ஓடிச்சென்று தூக்கினோம். காயம்பட்ட நபருக்கு தலை மற்றும் முகத்தில் காயம் இருந்தது. பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் கம்பம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோம். மேற்சொன்ன பள்ளி வாகனத்தை இயக்கிய நபர் ஆஜர் எதிரி தான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

ஆர் ஆர் பள்ளி கடந்து பிரதான சாலையில் இருந்து மேற்கு பக்கம் தெரியும் பிரிவு சாலையில் பேச்சியம்மன் கோவில் உள்ளது என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்திய பள்ளி வாகனம் கிழக்கு- மேற்கு நோக்கி சென்றது என்றால் மேற்கு- கிழக்கு நோக்கி தான் சென்றது. அந்த பள்ளி வாகனத்தில் குழந்தைகள் இருந்தன. Fairlands பள்ளி விபத்து நடந்த இடத்தில் இருந்து சுமார் 2 கி.மீ தொலைவில் உள்ளது. விபத்து சமயத்தில் கள்ளர் பள்ளி அருகே பள்ளி குழந்தைகள் இருந்தார்களா என்றால் இல்லை. பள்ளி வாகனம் எங்களது இருசக்கர வாகனத்தை முந்தி சென்ற இடத்தில் இருந்து சுமார் 100 அடி தொலைவில் விபத்து நடந்த இடமான வேகத்தடை உள்ளது. மேற்படி பள்ளி வாகனத்தில் இருந்த நடத்துநரை தவிர வேறு நபர்களுக்கு விபத்தால் காயம் ஏற்படவில்லை என்றால் சரிதான். வேகத்தடையினால் தான் பள்ளி வாகனத்தின் ஓட்டுநர் கவனக்குறைவாக பேருந்தை இயக்கினார் என்றால் சரிதான். பள்ளி வாகனத்தில் இருந்து முன்பக்கம் விழுந்தார், ஆனால் பின் சக்கரம் அவர் மீது மோதியது. விபத்து பள்ளி வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவால்

ஏற்படவில்லை என்றால் சரியல்ல. பள்ளி வாகனத்தில் நடத்துநராக இருந்து கவனக்குறைவால் தான் தானே கீழே விழுந்து விட்டார் என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரில் பார்க்காமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பள்ளி வாகனத்தில் இருந்த நடத்துநர் கீழே விழுந்த பிறகு தான் நாங்கள் பார்த்தோம் என்றால் சரிதான்.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.